# மருத்துவ வசதிகளும் மருத்துவ விடுமுறைக்கான நடைமுறைகளும்







மருத்துவ நிலையம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

*"உங்கள் நலன்களே எங்கள் செல்வம்"*

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவநிலையத்தினராகிய நாங்கள் எங்களது மிகப் பெறுமதியான செல்வமாகிய உங்களது உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக நலன்களை உறுதி செய்யும் பொருட்டு அர்ப்பணிப்புடனான மருத்துவ சேவைகளை வழங்க ஆயத்தமாக உள்ளோம்.

**எமது சுகாதார நிலையம் அமைவிடம்**




தலைமை மருத்துவ அதிகாரி, நான்கு மருத்துவ அதிகாரிகள், சிரேஷ்ட தாதியர், மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர்கள், மருந்தகத்தினர், சுகாதார பரிசோதகர்கள், எழுதுவினைஞர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் என்போர் இந்த மருத்துவ நிலையத்தின் ஊழியர்களாயுள்ளோம

**உங்களுக்குக் கிடைக்கக்கூடிய சேவைகள்**
**எல்லா சேவைகளும் இலவசமானவை.**

## வெளிநோயாளர் பிரிவு (OPD)

வேலை நேரங்கள்:

**வார நாட்கள்**
மு.ப. 8.30 – பி.ப. 12.15
பி.ப. 2.00 – பி.ப. 4.45

**வாரஇறுதி நாட்கள்**
மு.ப. 9.00 – மு.ப. 11.00

## 24 மணிநேர நோயாளர் விடுதி சிகிச்சை வசதி

ஆண் நோயாளர் விடுதி
பெண் நோயாளர் விடுதி
தனிமைப்படுத்தப்பட்ட நோயாளர் விடுதி

உங்களது நோயின் தன்மைக்கேற்ப நீங்கள் நோயாளர் விடுதியில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்படுவீர்கள்.

## பார்வையாளர் நேரம் - உள்ளக நோயாளர்

மு.ப 6.30 – மு.ப 7.00
மதியம் 12.00 – பி.ப 1.00
பி.ப 5.00 – பி.ப 6.00

## அவசர சிகிச்சை வண்டிச் சேவை (அம்புயூலன்ஸ்)

24 மணிநேர அவசர சிகிச்சை வண்டிச் சேவையை நீங்கள் இருக்கும் இடத்திலேயே பெற்றக்கொள்ளக்கூடியதாயிருக்கும். இந்தச் சேவைக்கான வேண்டுதல்கள் விடுதிக் காப்பாளர், உதவி விடுதிக் காப்பாளர், கல்விசார் ஊழியர் அல்லது பிற பொறுப்பதிகாரி ஒருவரால் மேற்கொள்ளப்படவேண்டும்.

## மருத்துவ ஆய்வு கூடம்

பல்கலைக்கழக மருத்துவ அதிகாரிகளின் வேண்டுகோளின்படி பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும், நிறைந்த கருவிகள் கொண்ட ஆய்வுகூடம் எங்களிடம் உள்ளது.

## மருந்தகம்

எங்களது மருந்தகமானது பெரிய அரச மருத்துவமனைகளில் கிடைக்கக்கூடியதான பெருமளவிலான மருந்துகளால் நிறைக்கப்பட்டுள்ளது.

## மருத்துவக் கல்வி

எமது எல்லா நிகழ்ச்சித் திட்டங்களிலும் மருத்துவக் கல்வியானது ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது.

## விளையாட்டு முன் பங்கு பற்றுகை மருத்துவப் பரிசோதனை.

விளையாட்டுச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மாணவர்கள் அவர்களது உடல் ஆரோக்கியத் தகுதியை உறுதி செய்யும் பொருட்டுப் பரிசோதிக்கப்படுவார்கள்.

## தடுப்பூசிகள்

தேவையேற்படும் போது குறிப்பிட்ட தடுப்பூசிகள் வழங்கப்படும்.

**சுகாதாரப் பாதுகாப்பு**

எமது சுகாதாரப் பரிசோதகர்களும் தலைமை மருத்துவ அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் தனிப்பட பயிற்றுவிக்கப்பட்ட வேலைப் படையும் உணவுச் சுகாதாரத்தைக் கண்காணித்தல், குடிநீரின் தூய்மையை உறுதி செய்தல், பல்கலைக்கழக கழிவுநீர் முறையைப் பராமரித்தல், குப்பைகளை அகற்றுதல், சூழல் நலன் பேணும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் பீடைகளைக் கட்டுப்படுத்தல் என்பவற்றுக்குப் பொறுப்பாயிருக்கிறார்கள். இவை தொடர்பான எந்த முறைப்பாடுகளும் தலைமை மருத்துவ அதிகாரிக்கு நேரடியாகவோ அல்லது விடுதிக்காப்பாளர் அல்லது உப விடுதிக் காப்பாளர் அல்லது உதவிப் பதிவாளர் ஊடாகவோ மேற்கொள்ளப்படலாம்.

**மருத்துவச் சான்றிதழ்களை வழங்குதல்**

பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தில் வெளிநோயாளராகவோ அல்லது விடுதியில் தங்கியிருந்தோ சிகிச்சை பெற்றிருப்பின் தேவை ஏற்படும்போது பல்கலைக்கழக மருத்துவ அலுவலர் மருத்துவச் சான்றிதழ் ஒன்றினை வழங்குவார்.

பல்கலைக்கழக மருத்துவ நிலையம் தவிர்ந்த பிற இடங்களில் ஒரு மாணவன் அல்லது மாணவி மருத்துவ சிகிச்சை பெறுமிடத்து மருத்துவச் சான்றிதழ் ஒன்று மருத்துவச் சிகிச்சை பெற்ற நிலையத்திலிருந்து உதவிப் பதிவாளருடாக தலைமை மருத்துவ அதிகாரியின் அனுமதியின் பொருட்டு அனுப்பப்பட வேண்டும்.

ஒரு மாணவன் அல்லது மாணவி சுகயீனமுற்றும் பரீட்சை எழுத முடியாமலும் இருப்பின் பரீட்சை நாளுக்கு முன்பாக பல்கலைக்கழக மருத்துவ நிலையத்திற்கு அறிவிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டவுடன் பீடத்துக்கு உங்கள் மருத்துவ விடுமுறை அறிவிக்கப்படும்.

பரீட்சை நோக்கங்களுக்காக வழங்கப்படும் எல்லா மருத்துவச் சான்றிதழ்களும் உதவிப் பதிவாளர் ஊடாக தலைமை அதிகாரியின் அத்தாட்சிக்கென அனுப்பட வேண்டும். தனியார் மருத்துவ நிலையங்களால் வழங்கப்படும் சான்றிதழ்கள் பரீட்சை நோக்கங்களின் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சிறப்பு மருத்துவர்களால் வழங்கப்படும் சான்றிதழ்கள் அல்லது அரச மருத்துவச் சான்றிதழ்கள் மட்டுமே பரீட்சை நோக்கங்களுக்கென ஏற்றுக்கொள்ளப்படும்.

**சுகாதார நிலையத்தில் பதிவு செய்யும் முறை**

வார நாட்களில் வேளை நேரத்தில் மாணவர் அடையாள அட்டை மற்றும் ஏற்கனவே சிகிச்சை பெற்று இருப்பின் அதன் பதிவுகளையும் கொண்டு வருதல் வேண்டும்.

## Telephone Numbers of the Health Centre

| | | |
|---|---|---|
| Chief Medical Officer | 2024 | 0812392024 |
| General | 2022 | 081-2388152<br>081-2392022 |
| Public Health Inspector | 2023 | 081-2392023 |
| Matron / Office | 2028 | 081-2392028 |
| Female Ward/Pharmacy | 2026 | 081-2392026 |